உ

ஸ்ரீராமஜெயம்

ராஜா தேசிங்கு

கதைச் சுருக்கம்

செஞ்சி இளவரசன் தேசிங்கு தன் நண்பன் மகமத்கானோடு ஒருநாள் வேட்டையாடியபின் அரண்மனை திரும்புகிறான். அரண்மனையின் ஒருபுறத்தில் அழுகுரல் கேட்கிறது. தேசிங்கு ஆச்சரியத்தோடு அப்பக்கம் செல்ல, அங்கு தன் தாய், தன் தந்தையின் படத்திற்கு முன்னின்று வருத்தப்படுவதைக் கண்டு அதன் காரணத்தைக் கேட்கிறான். ரமாபாய் முதலில் சொல்ல மறுத்து, பின் வற்புறுத்தலின்மேல், தரணிசிங் பாதுஷாவின் குதிரையை அடக்கச் சென்று தோல்வியுற்று அதனால் 16-வருஷம் சிறைவாசம் செய்வதை வருத்தத்துடன் தெரிவிக்கிறாள். தேசிங்கு குதிரையை தான் அடக்கி தந்தையை மீட்டு வருவதாக உரைத்து தன் நண்பன் மகமத்கானோடு டில்லிக்கு புறப்படுகிறான். டில்லியில் பாதுஷாவிடம் உத்திரவு பெற்று தன் தந்தையின் ஆசிர்வாதத்தையும் அடைந்து, தேசிங்கு குதிரை ஏறுவதற்கு நாள் குறிப்பிடப்படுகிறது. தரணிசிங்கும், மைந்தன் தேசிங்கும், தேவியைத் தரிசிக்க பவானி கோவிலுக்குச் செல்கின்றனர். டில்லி பாதுஷாவின் தளகர்த்தர் பீம்சிங்கின் புதல்வி பத்மினி, தன் தோழிகளோடு அதே ஆலயத்திற்கு வர, தேசிங்கும் பத்மினியும் சந்திக்கின்றனர். இருவருள்ளத்திலும் ஓர் உணர்ச்சி எழுகின்றது.

மறுநாள் தேசிங்கு பந்தயச்சாலையில் அக்குதிரையை அடக்க அதன்மீது தாவி ஏறுகிறான். பிறந்தது முதல் யாரையும் சுமந்தறியாத அக்குதிரை வெறிகொண்டு தேசிங்கை கீழே தள்ள முயன்று முடியாமல் ஆகாயத்தில் பறக்கிறது. அதைக் கண்டு தேசிங்கு தங்கள் குல தெய்வமான ரங்கனாதரை வேண்ட, அவரின் அருளினால் குதிரையின் பலம் ஒடுங்க தேசிங்கு வெற்றியடைகிறான். டில்லி பாதுஷா ஷா ஆலம் அவனைப்புகழ்ந்து 'ராஜா' என்ற பட்டமும் அளித்து போற்றுகிறான். அப்போது பீம்சிங் தன் புதல்வி பத்

மினியை தேசிங்குக்கு மணம் செய்வதாகக் கூற, அனைவரும் சம் மதித்து திருமணம் நடந்தேறுகிறது.

வெற்றிக் கொடியுடன் தந்தை தரணிசிங்குடனும் மனைவி பத் மினியோடும் தேசிங்கு செஞ்சிக் கோட்டைக்கு வந்து சில காலம் சுகமே வாழ்கிறான். பின்னர் தரணிசிங் நோய்வாய்ப் பட்டு மரண மடைய அவர் மனைவி ரமாபாயும் உடன்கட்டை யேறுகிறார். பத் மினிக்கு 2-வருடகாலம் பலன் சரியாக இல்லாததால் தேசிங்கு அவளைச் சந்திக்கக் கூடாதென்று ஜோஸ்யர்கள் கூறுகின்றனர். தேசிங்கும் பத்மினியும் அவசியமான சமயத்தில் நடுவில் திரையிட்டு பேசி வருகின்றனர்.

ஷா ஆலத்திற்கு பின் டில்லியை அரசு புரிந்துவரும் பரக்ஷிய ரின் பிரதிநிதியான ஆர்காட் நவாப் ஸைதுல்லாகான் செஞ்சியைக் கப்பம் கேட்க, வீரன் தேசிங்கு கொடுக்க மறுத்ததினால் இருவருக்கும் போர் ஆரம்பமாகிறது. வழுதாவூருக்கு தன் திரு மணத்திற்காகச் சென்றிருந்த தன் நண்பனும் தளகர்த்தனுமான மகமத்கானுக்கு செய்தி அனுப்பிவிட்டு போரில் வெற்றியளிக்கும் படி தன் குல தெய்வமான ரங்கநாதரைத் தொழுகிறான். போரில் ஜயம் கிடைக்காதென்று தேசிங்குக்கு உணர்த்த கோவிலில், சில துர்ச்சகுனங்கள் நேருகின்றன. அவையாவையும் பொருட் படுத் தாது தேசத்தின் லக்ஷ்யமே முக்யமென போருக்கு புறப்படுகிறான். வழுதாவூரில் திருமணக் கோலத்துடனிருந்த மகமத்கான், தேசிங் கின் நிரூபம் கண்டு பெற்றோரும், உற்றோரும் எவ்வளவோ சொல்லி யும் கேளாது, கலியாணத்தை விட்டு கடும்போரை விரும்பி வரு கிறான். தேசிங்கு சேனைகளைச் சித்தம் செய்து, அந்தப்புரம் சென்று திரைமறைவிலிருந்து பத்மினியிடம் போர்க்களம் செல்ல விடை கேட்க, அவள் தன் பதியை நேரில் பார்க்க முடியாததற்கு வருந்தி கரங்களையாவது காட்டும்படி வேண்டுகிறாள். உடைவாளால் திரை யைக் கிழித்து தேசிங்கு தன் கரத்தைநீட்ட, பத்மினி அவைகளை தன் கண்களில் ஒற்றிக் கொள்கிறாள். தேசிங்கு அவளுக்கு சமாதா னம் கூறி போருக்குப் புறப்படுகிறான்.

யுத்தம் ஆரம்பமாகிறது. மகமத்கான், தேசிங்கிடம் முதற் சண் டையை தனக்கு தரவேண்டுமென்று வேண்ட, தேசிங்கு தானும்

உடன்வருவதாகச் சொல்லியும் கேளாததால், அவ்வாறே போர் முனைக்குச் செல்ல அனுமதி யளிக்கிறான். போரில் மகமத்கான் நவாபின் சேனைகளை முறியடித்து வெற்றியுடன் திரும்பும்சமயம், பிணங்களோடு பிணமாய் மறைந்திருந்த நவாபின் சேனாதிபதி தாவுத்கான் பின்புறமிருந்து மகமத்கானை துப்பாக்கியினால் சுட்டுக் கொன்று விடுகிறான். இச்செய்தியை அறிந்த தேசிங்கு அடங்கா கோபம் கொண்டு போர்முனை சென்று எதிரியின்சேனைகளை சின்னா பின்னமாக்கி. தாவுத்கானையும் கொன்று பழிக்குப்பழி வாங்குகிறான். போரில் தேசிங்கு வெற்றி அடைகிறான். ஆனால் தேசிங்கிற்கு வாழ்க்கையில் வெறுப்பு உண்டாகிறது. தன் ஆருயிர் நண்பன் மகமத்கானை அடக்கம் செய்துள்ள இடத்திற்கு செல்கிறான். அவனுடைய நட்பையும், வீரத்தையும், தீரத்தையும், நினைந்து வருந்துகிறான். நாடு, நாயகி அனைத்தையும் வெறுத்து தன் நண்பனோடு தானும் உயிர் விடத் துணிகிறான். கடவுளைத் துதித்து தன் வெற்றிவாளை மேலே வீசி தன் மார்பில் தாங்கி மாள்கிறான். தேசிங்கின் தெய்வக் குதிரை பஞ்சகல்யாணி, செஞ்சி அரண்மனைக்குச் சென்று, பத்மினியிடம் அப்பரிதாபச் செய்தியை குறிப்பாகத் தெரிவிக்கிறது. விவரமுணர்ந்த பத்தினி பத்மினி, தன் நாதன் உயிர் விட்ட இடம் நாடி ஓடி வந்து, அவன்மீது விழுந்து தானும் ஆவி துறக்கிறாள்.

வீரத்யாக மணிகளை தேவர்கள் வாழ்த்துகிறார்கள்.

மங்களம்.

ஜயகோஷம்

பொக்கிஷக் குவியலென மதிக்கப் படும் சிறந்தபடம்!

வெற்றிக் கொடியுடன் தமிழ் நாடெங்கும் காண்பிக்கப் பட்டு வருகிறது.

பக்த துருவா

மாஸ்டர் தங்கப்பா, மிஸ் R. B. லக்ஷ்மிதேவி நடித்தது.

ராஜேஸ்வரி டாக்கீஸ்

ஈரோடு.

? எதிர் பாருங்கள் ! எமது அடுத்த படம்

உ

ஸ்ரீராமஜெயம்.

ராஜா தேசிங்கு

கோரஸ்.

ராகம்—கல்யாணி. தாளம்—ஆதி.

பல்லவி.

தேவி ராஜேஸ்வரி—ஜெய ஜெய

அநுபல்லவி.

தீன தயாபரி கான மனோஹரி
ஜெகன் மாதாவே திருவருள்புரி ஜெய— (தேவி.

சரணம்.

பூவினி லடியவர் பூஜிதவாணி
பொது நடமிடும் சிவ புனித கல்யாணி
பூரணி கருணையு தாரணி ராணி
புண்ய புராணி வேணி—
புரந்தரி நிரந்தரி ஜெய ஜெய— (தேவி.
காவிய மறைதுதி கணபதி பாதம்
கருதுவோம் கலைமகள் திருமால் பாதம்
ஜீவிய குருகுஹ தேவர்கள் பாதம்
சேவித வேதம் நீதம்—
தினந்தமிழ் மணங்கமிழ் பாரத— (தேவி.

ரமாபாய்.

பல்லவி.

ஹேப்ரபுவே என் செய்வேன்
பேதை யெனைப் பிரிய விதி
வந்ததும், விந்தையே
என் செய்வேன்— (ஹே ப்ரபுவே.

சரணம்.

பேர் பெரும் பாதுஷா அழைப்பைக்
கொண்டாடியே—பெருமையுடன்
துணிந்து போனீரே
பெரிய சபையில் தெய்வ பரியிடம்
தோல்வியுற்றே பேதலித்தே
சிறையு மானீரே
பிள்ளைபாக்யம் கண்டு நீரும் கொள்ளும்
ஸ்லாக்யம் என்று நேறும்
ப்ராணபதியே நாளும் புலம்பினேனே.

தேசிங்கு.

ராகம்—ரீதிகௌளை. தாளம்—ஆதி.

பல்லவி.

பாத பங்கயம் பணிந்தேன்—தாயே நின்
பார கவலையென்ன, கூறவேணும்
தணிந்தேன். (பாத

அநுபல்லவி.

பேதகமுடன் பாலகனிடம் மறைக்கின்றீர்
ப்ரமாணமாய் சொல்லும் அம்மா
உண்மையை நல்ல. (பாத

சரணம்.

மகிமெனுந் தந்தை ஓவியம் தனையே
மஹா துக்கமாய் போற்றினீரனையே
பகிரங்கமதாய் பெருகும் கண்ணீரினையே
புதிக் குள்ளடக்கினலுங் கொதிக்கு
மவ்வினையே.

சகியேன் இனிமனமே—எனிந்த
சஞ்சல மனுதினமே நானினிச்

கசியென இருப்பதுந் தோஷமே மோசமே
சோகமகற்ற உயிர் த்யாகஞ் செய்
வேன் சத்யமாய். (பாத

தேசிங்கு.

ராகம்—வசந்தா. தாளம்—ஆதி.

பல்லவி.

தைர்ய விடைதாரும் தாயே திட. (தைர்ய

அநுபல்லவி.

தாயே நின் சேயனென் தூய மகாபுகழ்
தரணிதனில் பெருகிடவே
கருணையுடன. (தைர்ய

சரணம்.

சகலரும் பழிப்பதை இகமதில்
பொருப்பேனோ—தணயனின்
கடமையை மறந்தினி இருப்பேனோ
சத்தியமாய், இத்ததியே
வெற்றி பெறத். (தைர்ய

ரமாபாய்.

ராகம்—கானடா தாளம்—ஏகம்.

பல்லவி

புத்ர சோகம் பெரிதே—உலகினில்
பிரிந்து வாழ்வதரிதே
தெரிகுவாய். (புத்ர

அநுபல்லவி

மித்ர பேத மடைந்தாருன் தந்தைபதில்
மேலும் நீ புகுதல் சீலமோ
புகலவாய். (புத்ர

சரணம.

நாயகர் பிரிவினல் நலிந்த என் மனமே
நன்மகனுனைக் கண்டு களிக்குதிங்கனமே

காயுரை மதிப்பதே தரும மெய்த்தனமே
தாங்கிடேன் துயரமே நீங்கிடேன்
தினமே (புத்ர

ராஜகுரு.

ராகம்—பிலஹரி தாளம்—ரூபகம்.

பல்லவி.

தேவாதி தேவா உமது-திருவடி
சரணம்-சரணம். (தேவாதி

அநுபல்லவி.

ஜீவ கோடிகள் தம்மையே ரக்ஷிக்கும்
ஜகதாயக ரங்கனாயக. (தேவாதி

சரணம்.

பக்த பாலகன் துயரம் மீளவே
பவபயவினை கருகி மாளவே
நித்தமுன் தெரிசனந் தந்தாளவே
நேசாகக் கருணை புரியும் நாராயண
நமோ நமோ. (தேவாதி

தரணிசிங்.

ராகம்—ஜீவன்புரி தாளம்—ரூபகம்

பல்லவி.

சிந்தை நொந்தேன் தெய்வமே போர்
வீரனா மென்விதியிதோ. (சிந்தை

அநுபல்லவி.

விருதுபேசி ராஜ சபையில் வெட்கி
அவமானமாகி. (சிந்தை

சரணம்.

நம்பினேனெறு வருஷ முடிவை
நாயகிமா வதனங்காண
இன்ப சேயன் அருமை பூண
இறைவனே நல்லருள் செய்வாய். (சிந்தை

. தேசிங்கும் தரணிசிங்கும்.

ராகம்—பைரவி தாளம்—ஆதி

பல்லவி.

தாயே பவானி தர்ம தேவதா-வரம்-
தந்தே கிருபை செய் ஸதா-
தரணிமீது சரணமே. (தாயே

அநுபல்லவி.

சேய நின் பூம்பாதம் கூடினேனே
அம்பா-ஜனன மரண பிணி
தீர்த்திடும் பூரணி அனவரதமு மெனை
கார்த்திடும் காரணி. (தாயே

சரணம்

நெஞ்சார நீதிநெறி தேடினேமே-இன்று
நேராக சன்னதியை கூடினேமே-தினம்
அஞ்சாமல் வெற்றி பெறப் பாடினேமே-எனை
ஆதரி, வீர மனோகரி மாதவன்
சோதரி ஜீவதயாபரி சுபகரி (தாயே

காமிக்.

ராகம்—ஹிந்துஸ்தான் பிஹாக் தாளம்—ஏகம்

முதல் பாட்டு

தெய்வ லோகத்தில் பிறந்த குதிரை
சொர்ண மேகக் குதிரை-அது
வெள்ளிக்கிழமை பிறந்த குதிரை
வேகமான குதிரை-ஆஹா (தெய்வ

(தொகையறு)

பதினெட்டு வயசு ஆச்சுது பாரு
பாராச்சாரி குதிரை-அதன்
பக்கத்தில் யாரும் போனால் கொல்லும்
பாணம் போலவே

இரண்டாவது. பாட்டு.

இந்த உலகத்தில் ஒருவருமில்லே
அந்த குதிரை ஏற-வந்து
ஏறின பேரைக் குப்புறத் தள்ளும்
எமலோகம் சேர-ஆஹா (தெய்வ

(தொகையறு)

தெய்வ சக்தியால் பிறந்த பிள்ளேயே
துணிந்து நடத்த வேணும்-பல
தேச ராஜரும் மான மிழந்து
சென்றுரே காணும்.

இருவரும்.

(ஆஹா) தெய்வ லோகத்தில் பிறந்த
குதிரே, சொர்ண மேகக் குதிரே.

ராஜகுரு.

ராகம்—ஹிந்துஸ்தான் பிஹாக். தாளம். ஏகம்.

பல்லவி.

ரங்கனுயகா, ஹே தெய்வமே
ஜெகந்நாதா நீ தான் மாதா
பிதா குரு. (ரங்க

சரணம்.

தங்கமாகிய ஜெய, சிங்க
பாலகன் பயம்—தனேயே
தவிர்ப்பாய் உனேயே
துதித்தேன். (ரங்க

பங்கமில்லாத கீர்த்தி—பாலிப்பாய்
வேத மூர்த்தி-நின்-பதமே
சதமே-நிதமே ஹரி ஓம். (ரங்க

காமிக் 2.

முதல்.

கனைத்து கதும்பி வெளியில் வந்தார், ராஜாதேசிங்கு,
கோட்டை யிடிந்து விழுந்தாற்போலே குதிரையும்
கனைத்த தங்கு.

அன்பத்தாறு தேச ராஜர்கள் அதிர்ந்து விழுந்தாரே
அப்போது ராஜாதேசிங்கு குதிரையின் அருகில்
நின்றுரே.

இரண்டாவது.

பாராசாரியை சலாம் வாங்கியே பாய்ந்து ஏறினரும்
(பல) பட்டணமெல்லாம் சுற்றியே மேலே
பறந்து மீறினதே.

கோவிந்தா கோவிந்தாவென்று குதிரையை
தட்டி விட்டார்

(அது) கோபாவேசங் கொண்டு சீறினது
கொடிய நாகம் போலே.

இடது காலுக்கு சிமிட்டா கொடுத்தார் ராஜாதேசிங்கு
(மதம்) எல்லாம் அடங்கிச் சொன்னதைக்
கேட்டு இறங்கி வந்ததங்கே.

மகமத்கானும், வீரர்களும்.

ராகம்—ஹி. பிஹாக். தாளம்—ஏகம்.

பல்லவி.

தேசமே அபிமானம்-பணி செய்வதே
ப்ரதானம்-என். (தேசமே

சரணம்.

மஹராஜ வாழ்த்து கானம்-எங்
நாளுமே தரும் ஞானம்
என். (தேசமே

தொகையரு.

ஜெயசிங்கின் உயிர் நேசமே-என்
தவ பாக்ய உபவாசமே.

பாட்டு.

மாசில்லாத மோக்ஷம்—சுய
வாழ்க்கையே சுபீக்ஷம். (தேசமே

பத்மினி.

ராகம்—ஹி. பிஹாக். தாளம்—ஏகம்.

பாட்டு.

வசந்த ருது மாலே நேரம்,
இசைந்த புதுச் சோலே யோரம்,
விசைந்துவரும் தென்றல் சஞ்சாரம். (வச

அசைந்து மயிலாடும் தீரம்
அறிந்து குயில் பாடும் சாரம்
அணைந்து விளையாடிடப் பெறுவேனோ. (வச

தொகையறா.

அன்புமயமான என் ப்ராணபதி
உருவமே-யான் காணும்
பொருள்கள் யாவும்,
அவரின்றி வேறில்லை யென்பதே
அடியாளின் அழியாத கொள்கை
யாகும் (வசந்த

தேசிங்கும் பத்மினியும்.

ராகம்—ஹிந்துஸ்தானி தோடி தாளம்—ஆதி.

தேசிங்கு

சத்ய சம்மதமாய்த் தானே மனமே
சாந்தி பெறலாமே—நாளுமே—
ஜகமீதே இரு பேரும் ஓரே
ஆவி என அமைந்தோ மிதே
சுகமே. (சத்ய

பத்மினி.

ஸகல ஜீவனும் தெய்வ மென்றே
சந்தோஷமதே தான் கூறவே
சாலோக சாமீப சாரூப உலகம்
தனிலினிதெனு மாகாதலே. (ஸகல

ரமாபாய்.

ராகம்—காபி தாளம்—ஆதி

பல்லவி.

பாலனே சீலனே பராக்ரம—விஜய (பாலனே

பதியுடன் சதியா யித் ததியே நற்
கதி சேர்வேன். (பாலனே

சரணம்.

ஞாலமே புகழ நாளும் நீ வாழ்வாய்
ஞானச் செல்வமே நவின்றேன்,
நவின்றேன், நவின்றேன். (பாலனே

பால் மொழிக் குயிலே பதுமினி மயிலே
பதியே தெய்வமாய் பதிப்பாய்
மதிப்பாய் துதிப்பாய்

எனதாருயிர் மருகிய அஞ்சாதே நீ

அடிமையின் வாழ்வே ஆகாது தாழ்வே
அருஞ் சுதந்திரம் அடைவீர்,
அடைவீர், அடைவீர். (பாலனே

காமிக் 3. குதிரைக்காரி.

ஆற்காட்டிலிருந்து வந்ததிலே
என் புருசனோடே அடிக்கடி
மனப் புளுக்க மானதிலே (ஆற்.
மேற் கூட்டி சமைக்க முடியலே
என் மனசிலேதோ வெறுப்பு
தட்டுது பொயுதும் விடியல்லே (ஆற்.

(சந்தம்.)

என்ன இருந்தாலும் அன்னிய சம்மந்தம்
என்றைக்கும் இப்படித்தான்—தினம்

எலியும் பூனையும் போலிருந்தாலே முன்
னேறுவதெப்படித்தான்—என்னை

இடிச்சி பேசுறதும், பல்லை கடிச்சி
ஏசுறதும், இதை எத்தனை

நாளைக்கு பொறுப்பேன்
உசுறு வெல்லமா, அப்படித்தான் (ஆற்.

பத்மினி.

ராகம்—செஞ்சுருட்டி. தாளம் திஸ்ர ஏகம்.

சதிபதி இருவரின் அன்பே, இன்ப
ஸ்லாக்யமாம் பாக்யம் (சதிபதி

ஸ்லாக்யமாம் பாக்யம் அருள்
வாக்யமாம் பாக்யம் (சதிபதி

மதி குலாவுங் காதல் கூர்ந்த
வாழ்க்கையே நல் மோக்ஷமாம்
மாதர் தம்மனம்போல் வாய்க்கும்
மாங்கல்ய கடாக்ஷமாம்
மன்னரே தெய்வம்-பணிந்
தின் னுயிர் உய்வேன். (சதிபதி

தொகையறு

ஒருயிரும் ஈருடலுமாகவே
பிறவி தொறும் ஒன்றாகும்
உறவு வேண்டும்
உண்மை யென் எண்ணமிதை
இறைவனே ஈடேற்ற—உறுதியாய்
பணிவேன் யாண்டும்.

பாட்டு.

ஓ ஜெகன்னாதா, மறை பேசிடும் பாதா

காமிக் 4.

ராகம்—நாத நாமக்ரியை. தாளம்—ஏகம்.

(1) ஆற்காட் நவாப்பு செஞ்சிக்கே ஒரு
தூது விட்டாரே
அந்த தூதனும் வந்து சபையிலே
சலாமு மிட்டாரே.

(2) சைதுல்லாகான் செஞ்சியில் கிஸ்தி
சம்பளம் கேட்டாரே-இது
சங்கதி கேட்டு தேசிங்கு கண்களின்
தணலைப் போட்டாரே.

(3) நற நறவென்று பல்லைக் கடித்தார் ராஜா
தேசிங்கு—எங்கள்
ராஜா எதிரில் தோன்றமல்லனின்
நாடி விழுந்த தங்கே.

(4) கோட்டை வெளியிலே குவிக்கிற மணலை
-கொண்டு போகச் சொன்னார்
கழித்து போட்டதோர் வரகு வைக்கலைக்
கட்டி போகச் சொன்னார்

(5) கத்தி முனையிலே சைதுல்லாவை கப்பம்
வாங்கச் சொன்னார்—மீசை
முளைத்தவனானால் சண்டைக்கி
வெளியே வரச் சொன்னார்

(6) அந்தப் பேச்சை காதிலே கேட்டான்
வந்த தோன்றமல்லன்—அவன்
அடங்கி ஒடுங்கி நடுங்கி ஓடின
அதிசயமென்ன சொலவேன்.

ராகம்—ஹி. தோடி. தாளம்—ஏகம்.

(1) நீல விழிகள் நெறியுமய்யா எங்கள்
நவாபுக்கு;
மீசை பட பட வென்று துடிக்கு
மய்யா எங்கள் நவாபுக்கு,
(2) பட்டாவுருவி கையிலே பிடிப்பார்
நவாப்பு சைதுல்லா—அவர்
கண கணவென்று நகார் முழங்குவர்
ஆற்காட் நவாப்பு.

பத்மினியும், தேசிங்கும்.

பத்மினி:—

ப்ராணபதி பிரிந்தே, நான் சகியேன்

தேசிங்கு:—

பெண்மணியே வீரக் கண்மணியே
ஏனோ, சோகம் நீதமல்லவே,
பீம சேனா பதியின் மா மகளே,
திரு மகளே.

பத்மினி:—

பேர் பெருவீரே, போரினிலே
நாதா ஏதோ பேசினேனோயோ
பேதமையால் அடியாள்—பேசினேனோயோ
ஏதோ பேசினேனோயோ

காமிக். 4.

ராகம்—செஞ்சுருட்டி தாளம்—ஏகம்

மாமா மச்சானே—உன் மனசை
அறிய வச்சுப் போட்டேனே. (மாமா

(சந்தம்.)

உன்னைப் பிறிந்து நான் ஆத்திலே விழுந்து
உயிரே விடுவேனோ—உண்டு
உடுத்திக் களிக்கும் சிறு வயதிலே
அவதிப்படுவேனோ. (மாமா

பேயே பிசாசே-நீ பெண்டாட்டி
யில்லெ போடி சைத்தான். (பேயே

நீயே ஏமாத்துவதை நிச்சயமாய்
நம்ப மாட்டேன்,
நீலி ஆவேசமாக நெருங்கிடாதே
சொல்லிப் போட்டேன்.
அம்மம்மா காளியைப்போல் தோணுதடி
ஆங்கார கோர வுரு காணுதடி. (பேயே

மகமத்கானும், வீரர்களும்

மகமத்.

வெற்றி வீரர்களே-ரண சூரர்களே.

வீரர்கள்.

ஜெயந்தான் நமதே.

மகமத்.

செஞ்சி மன்னர் கொடியே—
ஜீவமணிக் கொடியே
தேச நிதியே. (வீரர்களே

மகமத்.

புகழ் தேடுவோமே
துதி பாடுவோமே
வகை சூடுவோமே. (வெற்றி வீரர்களே

நாட்டுப்புறப்பெண்.

ராகம்—ஸஹாண. தாளம்—த்ருபுடை.

பல்லவி.

ஐயோ வகையறியே னிதுணளே-வந்த
அவதிக்கென் செய்வே னந்தோ
சிறியாளே.

சரணம்.

ஐயன் கிருபை யெம்மேல் அணுவளவு
மில்லையே—
ஆதாரமாய் எங்களைக் கார்க்க
யாருமில்லையே.

நாட்டுப்புறப்பெண், பத்மினி, ராஜகுரு.

ராகம்—காபி. தாளம்—திஸ்ர ஏகம்.

பெண்.

பல்லவி.

ஆதாரமற்ற அனாதையே-ஆகினேன்
மேற் கொண்டேன் வாதையே

பத்மினி.

அநுபல்லவி.

ஆகுல மானதே கிட நாளும்
யாமுன்னையே காப்பாற்றுவோம்.

ராஜகுரு.

பல்லவி.

ஆதரவாய் பெற்ற தாய் தந்தை
யான சுற்ற மெதுமில்லையா.

பெண்.

சரணம்.

போதுறும் போரிற் புகுந்தெந்தை சாக
போஷிக்கும் தாய் பிணி பூண்டவள் தேக
வாதனையானாள் வயற்று பசிக்காக
வழியில் நின்றே அழுதேன், வந்தீர்
முன்பாக. (ஆதார

தேசிங்கு.

விருத்தம்

அதி பால்ய வயதிலே உயிர்தோழனாய் நின்னை
அடைந்ததை நினைந்திடுவனோ,
ஆடியே பாடியே ஓடியே களித்த தொரு
அருமையை நினைந்திடுவனோ,
கதியாக யென்னுடன் நிழல்போற் தொடர்ந்த
நின் கருணையை நினைந்திடுவனோ,
கனவிலும் நினைவிலும் பிரியாத பேரன்பு
கனிந்ததை நினைந்திடுவனோ,
நிதியாக யென்னையே போற்றிக் காப்பாற்றிய
நன்னெறி முறையை நினைந்திடுவனோ,
நிக்காவை யுதறி நீ பொய்க்காத போர்
முனையில் நின்றதை நினைந்திடுவனோ,

மதியூகி தேசாபி மானமே சடராகி
வளர்ந்ததை நினைந்திடுவனோ,
மதியை நினைந்திடுவனோ, விதியை
நினைந்திடுவனோ ஹா! மகமத்!
என் செய்வேன்.

பத்மினி.

ராகம்—பிஹாக் தாளம்—ஆதி

பல்லவி.

நாதா இதோ நானும் வாரேன் ப்ராண.— (நாதா

சரணம்.

(1) ஆதரவாக அணைத்துக் கொள்வீரே
அன்பே மெய்க்காதல் கரும்பே
கனியே — துரை (நாதா

(2) பூதல மீதே புகழ் பெறுவேனே
புண்ய லாவண்ய மா.கண்ய
ஜீவ காருண்ய. (நாதா

ராஜகுருவும், கந்தர்வ மாதர்களும்.

ராகம்—ஹி. தோடி. தாளம்—ஏகம்.

ரராஜகுரு.

பல்லவி.

ராஜகுமாரா, ரம்ய கம்பீரா
ராணியும் நீயும் வீரம் நல்கும்
சொர்க்கம் செல்க தீரா.
ரமணனே நின்-பெருமை கூறி
அமரர் தூவுப்-மலரின் மாறி
நறுமணங் கமிழ்ந்திடவே. (ராஜ

கந்தர்வ மாதர்கள்.

சரணம்.

தேசோபகாரன் நீயே-தீரவுதாரன்
நீயே
மாசில்லா தேவியுடன் வந்தே அன்பாய்
வாழ்க வாழ்க,
மகிபனே யுன் புகழ் விலாசம்
அகில லோகம் புகும் ப்ரகாசம்
வருக வருக வருக. (தேசோப

மங்களம்

ஸ்ரீ ருக்மணி தேவியின்

பரத நாட்டியப் பாட்டுகள்.

ராகம்—காம்போதி. தாளம்—சதுஸ்ரஜாதி ரூபகம்.

பதரி வருகு துருகு தென்னாவி
பதைக்குதே வகை சொல்லடி—
சற்று நில்லடி—மனங் கல்லோடி—அடி
தளுக்கு குலுக்கு மினுக்கென்னபோடி. (பதரி

அநுபல்லவி.

எதிரில்லாத பழனி வேலவரிடத்தினார
த்தில் கருத்தை வைத்தபின் ஏது மதன்
கணை மார்பில் சோருதே
எந்தன் துரை கந்தசாமியைக் கூட்டிவா.

சரணம்.

வாடி எந்தன் வடிவேலரைக் கூட்டிவா
கூடி மருவிக்குலாவி விளையாட
பாடுவார் காம்போதி மாயப்பொடி
போடுவார்—எந்தன்மீது, போடி
அவரைப் போல் ஈடு ஜோடுண்டோடி,
பிடித்தார், எந்தன் கை கொடுத்தார்
மாணிக்கம், நாடியவர் கேட்ட செஞ்
சொற்பதம் பாடி, மோடி செய்யாமலே
தேடி அழைத்து வா,

ஸ்வரம்.

1) ச்ா ரி ஸ்தாப மகரிச நிதஸரி மப்தரிஸ்ா
2) ச்ா்ரிக் ஸ்க்ா்ரிஸ் நிதபம பதச் நிதபமகரி
சரிஸதரீஸ் பமயப நிதா்ரிஸ்ா
நிதபம பதஸ்.

3) தா நீதபமகரி மாபதா ரிஸ்க்ரிஸ்தா
ரிஸ்தா பமகரி சரிமப.

4) தாநித பமகரி ம்பதநிதா தாரிஸ்கரிஸா
தநிதக்ரிஸ்தா பமகரி ஸரிபமதா
நிதக்ரிஸ் நிதப மபதஸா.

5) ஸ்ாரி ரிஸ்நித ஸ்ஸாநிதபததா
நிதமகரி கஸரிஸா
ரிஸமரி பமதப நீதாரிஸா நிதபமபத
ஸ்ரிக்ரிக்சா ரிரிச் நிதபதரி தரித
ஸ்நிதபமகரி மபதா க்ரிஸ்நித
ரிஸாநிதப மகரி பபதஸா.

ராகம்—ஸுருட்டி. தாளம்—ஆதி.

பல்லவி.

ஸரிக குங்குமு ஸுகுதானி தோவாடு,
ஸைக ஜேஷினதி கண்டினே—

அநுபல்லவி.

திரிகி திரிகி ரூசு கொனி ஸொகஸுகா,
தேவுடைன மன்னரு—ரங்குடு.

DEVI PRESS, MOUNT ROAD, MADRAS.